TAM203H

# நான்கு நண்பர்கள்

**(Source: https://www.youtube.com/watch?v=eky1SCBmKHw)**

**நீதி:**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு. நண்பர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ வேண்டும்.




ஒரு காட்டில் காகம், மான், எலி மற்றும் ஆமை ஆகிய நான்கு நண்பர்கள் தினமும் மாமரத்தின் அடியில் சந்தித்துப் பேசி மகிழ்ந்து வாழ்ந்து வந்தார்கள்.





ஒரு நாள் மான் மட்டும் தன் நண்பர்களைக்காண வரவில்லை. எனவே கவலையுற்ற நண்பர்கள் மானைத் தேட முடிவுசெய்தனர். காகம் அங்கும் இங்கும் அலைந்து அலைந்து தேடியது.




ஒரு மரத்தின் அடியில் தன்னுடைய நண்பன் வேடனின் வலையில் சிக்கியிருப்பதைக் காகம் கண்டுகொண்டது. மான் ‘உதவி, உதவி’ என்று கத்திக் கொண்டிருந்தது.




மாமரத்திற்குத் திரும்பிய காகம் தன் நண்பர்களான எலி மற்றும் ஆமையிடம் மானை எப்படி விடுவிப்பது எனக் கலந்து ஆலோசித்தது. எலி, “என்னுடைய கூரிய பற்களால் வலையை அறுத்துவிட முடியும்” என்று கூறியது.




காகம் எலியைத் தன் முதுகில் சுமந்துகொண்டே பறந்து பறந்து மான் வலையில் சிக்கியிருக்கும் இடத்திற்குச் சென்றது.




மான் சிக்கியிருக்கும் இடத்திற்குச் சென்ற உடன் எலி தன் கூரிய பற்களால் வலையைக் கடித்து அறுக்க ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் எலி வலையை அறுத்து மானை விடுதலை செய்தது.




சிறிது நேரம் கழித்து அங்கு வந்த வேடன் மானைக் காணமுடியாமல் ஏமாற்றமுற்றான். இருந்தாலும் ஆமையால் வேகமாக நடக்க முடியாததால் ஆமையை வேடன் பிடித்து வலையில் போட்டுக்கொண்டான்.




தங்களுடைய நண்பன் ஆமை வேடனிடம் சிக்கிக்கொண்டதை அறிந்த காகம்,எலி மற்றும் மான் ஆகியவை எப்படி ஆமையை விடுவிக்கலாம் என யோசித்தன. அப்போது மானுக்கு ஒரு திடீர் யோசனை வந்தது.




வேடன் ஆமையுடன் நடந்து செல்லும் பொழுது, மான் அவன் கண்ணில்படும்படி அங்கும் இங்கும் ஓடியது.




மானைக் கண்டவுடன் ஆசைப்பட்ட வேடன் ஆமையை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு மானைப் பிடிக்க ஓடினான்.




வேடன் தனியாக விட்டு விட்டுப் போன வலையில் சிக்கிக் கொண்ட ஆமையை எலி தன் கூரிய பற்களால் வலையைக் கடித்து அறுத்து விடுவித்தது.




மானும மிக வேகமாக ஓடி வேடனிடம் இருந்து தப்பித்தது.




மீண்டும் காகம், மான், எலி மற்றும் ஆமை என நான்கு நண்பர்களும் ஒன்றாக மாமரத்தின் அடியில் சந்தித்து மகிழ்ந்து வாழ்ந்தார்கள்.